(1)

# அப்துல் கலாம் அவர்கள் கனவு கண்ட இந்தியா.

தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் தீவில் ஒரு நடுத்தர முஸ்லிம் குடும்பத்தில் 15-9-1931 ஆண்டு அப்துல் கலாம் பிறந்தார். அவர்கள் குடும்பம் ஏழைக்குடும்பம். அவருக்கு மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். அவர் சிறு வயது முதல் விடியற்காலையில் எழுந்து நடக்க ~~தொடங்கும்~~ ஆரம்பிப்பார். முதலில் கோயிலடியில் குடியிருந்த ஞானாசிரியரிடம் பாடம் கற்கச் செல்வார். அதன் பிறகு அரசு பள்ளிக்குச் செல்வார். அதன் பிறகு புகை வண்டி நிலையச் சாலைக்குச் ~~சென்று~~ நாளிதழ் கட்டு எடுத்து வந்து கோயில் நகருந்த மக்களுக்கு விநியோகம் செய்வார். அதன் பிறகு தான் அவரால் பள்ளிக்குச் செல்ல முடியும். போகும் வழி எல்லாம் மணல் குன்றுகள் ஏறி இறங்கித்தான் செல்வார்.

இராமேஸ்வரம் ஆரம்பப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார் அவர் குடும்பம் முஸ்லிம் குடும்பமாக இருந்தாலும் இந்து குடும்பத்தினரிடம் நட்போடு பழகும் குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். ஐந்தாம் வகுப்பு முடித்ததும் ராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். பிறகு மேற்படிப்புக்காக 1950 ஆம் ஆண்டு திருச்சியில் 'செயின்ட் ஜோசப்'கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

அதன் பிறகு தொழில் நுட்பக் கல்வியில் தென்னகத்தின் மணிமகுடமாகக் கருதப்பட்ட எம்.ஐ.டி. யில் (MADRAS INSTITUTE OF TECHNOLOGY) சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். அங்கு "விண்வெளிப் பொறியியலில்" மேற்படிப்பை முடித்தார்.

பாதுகாப்பு ஆராய்ச்சி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக ஆராய்ச்சி ~~வாழ்க்கையைத்~~ ஆராய்ச்சித் தொடங்கினார். இந்திய விண்வெளிக் கூடத்தில் (ISRO) ஆராய்ச்சிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணை (SLV) திட்டில் செயற்கைக் கோள்

(2)

பங்காற்றினார்.
ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். பயன் படுத்தி
(SLV) - III ராக்கெட்டைப் பயன் படுத்தி விண்ணில் ஏவச்
ரோகிணி - 1 துணைக் கோளை விண்ணில் ஏவச் பிரதமர்
செய்தார். 1999 இல் அன்றைய பிரதமர் "பொக்ரான
வாஜ்பாயின் அறிவுறுத்தலுடன் "பொக்ரான
அணு ஆய்வு சோதனையில்" முக்கிய பங்காற்றி-
னார். ஐந்து ஏவு கணைத் திட்டங்களில் பணி
~~பு~~ புரிந்துள்ளார். ஏவுகணை நாயகன் ' எனப்
பட்டார்.

அரசியலில் ஈடுபடாமல் விஞ்ஞானியாகவே
மட்டும் அறியப்பட்ட கலாம் ஜனாதிபதியாக
பதவி ஏற்றது இந்தியாவின் பொற்காலம்.
நம்நாட்டின் 11வது ஜனாதிபதியாக 2002-2007
வரை பணியாற்றினார்.

'இந்தியா விஷன் 2000' என்ற புத்தகத்தை எழுதினார்.

அந்த நூலில் வருங்கால இந்தியா எப்படி எல்லாம்
இருக்க வேண்டும் என்று கனா கண்டார். இந்த நம்நாடு
ஆண்டு 2020 க்குள் எல்லா துறைகளிலும் அதீத
வளர்ச்சிபெற்று ஒரு வல்லரசு நாடாக ~~மாற~~
மாறவேண்டும் என்பதே அவருடைய ஆசை. அதுவே
அவருடைய கனவு. வேளாண்மை, கல்வி, உடல்நலம்,
வேலை வாய்ப்பு போன்ற எல்லா துறைகளிலும்
அதீத வளர்ச்சி அடையவேண்டும். வறுமை ஒழிய
வேண்டும். அதற்கு மாணவர்கள் எல்லோரும்
தங்கள் தங்கள் துறைகளில் கடுமையாக உழைக்க
வேண்டும். அரசாங்கமும் மக்களுக்கு உதவி செய்ய
வேண்டும். நாட்டு மக்கள் எல்லோரும் உயர்ந்த நிலையை
அடைய வேண்டும். தான் கண்ட கனவு பலிக்க
வேண்டும் என்றால் நாட்டில் உள்ள மாணவர்களும்
இளைஞர்களும் கனவு காண வேண்டும் என்று வற்புறுத்தி-
னார்.

கனவு என்பது நம் தூக்கத்தில் வருவது இல்லை. நம்மைத் தூங்கவிடாமல் அவற்றை நிறைவேற்றுவதற்கு முன் தூங்க முடியாமல் போவதே கனவுகள். கனவு, கனவு, கனவு, கனவுகள் எண்ணங்களாக மாறுகின்றன. மற்றும் எண்ணங்கள் செயலில் விளைகின்றன. சிறந்த கனவு காண்பவர்களின் பெரிய கனவுகள் எப்போதும் நிறைவேறும்.

எப்போதும் மாணவர்களை நீங்களும் இப்படி கனவு காணுங்கள். நாடு நிச்சயம் வல்லரசாக மாறும் என்று அவர்களை ஊக்குவிப்பார்.

இந்திய விமானப்படையில் சேருவதற்கான முயற்சியில் தோல்வியுற்றபோது கலாம் விரக்தியுடன் திரும்பினார். வரும் போது ரிஷிகேசில் சிவானந்தரின் ஆஸ்ரமத்தில் கீதை உரையைக் கேட்க நேர்ந்தது. கலாமைத் தனியே அழைத்து அவரது துயரம் பற்றி கேட்ட பிறகு கிருஷ்ணரின் உபதேசமாக கீதையின் 11ம் அத்தியாயத்தில் 'துன்பத்தை நினைத்து துவண்டு போகாதே துன்பத்திற்கு துன்பம் கொடு மேற்கொண்டு முயற்சி மேற்கொள்" என்று அறிவுரை தந்து 18 நூல்களை அளித்திருக்கிறார் சிவானந்தர். "அவற்றில் உள்ள சத்விஷயங்களே தனது வாழ்க்கை முழுவதிற்குமான வெற்றிகளுக்கான அஸ்திவாரம்" என்று பல கல்விக் கூடங்களிலும் சொல்லி இருக்கிறார்.

குரானைத் தினம் ஓதிய கலாம் கீதையின் தத்துவங்களையும் கடைப்பிடித்திருக்கிறார். தன்னுடைய இந்த அளவு முன்னேற்றத்திற்குக் காரணம், தன் பெற்றோர், தன் ஆசிரியர்கள், சக விஞ்ஞானிகள் என்று இவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்துச் சொல்வார். கலாம் அவர்கள் தான் படித்து முடித்ததும் விமானப்படை விமானியாக வேண்டும் என்ற கனவும் அவர் தந்தை தன் மகன் கலெக்டர் ஆக வேண்டும் என்ற கனவும் பலிக்காமல், ஒரு தலைசிறந்த

(4)

உலகம் புகழும் விஞ்ஞானியாக ஆனார்.

கலாம் அவர்கள் பெற்ற பட்டங்கள்.

நம் நாட்டின் சிறந்த விருதுகளான "பத்ம பூஷன்," "பத்ம விபூஷன்" 'பாரத் ரத்னா' முதலியவை. இந்திரா காந்தி அவார்ட் (நேஷனல் இன்டகரேஷன்) இராமானுஜர் அவார்ட்.

"கற்பித்தல் ஒரு புனிதமான வேலை" மக்கள் என்னை ஆசிரியராக நினைவில் வைத்து இருப்பதே எனக்குப் பெருமை" என்ற கலாம் இறுதி நாள் வரையில் மாணவர்களிடையே உரையாற்றுவதையே கடமையாக வைத்திருந்தார். ஷில்லாங்கில் இந்திய மேலாண்மை பயிற்சி கழகத்தில் (IIM) உரையாற்றும் போது தான் அவரது இறுதி மூச்சு பிரிந்தது. அமெரிக்கா நாசா விண்வெளி மையத்தில் பணியாற்ற வாய்ப்பு வந்ததும், இந்திய மாணவர்களிடையே கலந்து உரையாடி அவர்களை நல்வழிப் படுத்துவதில் தான் தன் இறுதி நாள் வரை பாடுபட்டார். தன்னுடைய பிரார்த்தனை நேரத்திலும் கூட, "இறைவா என் நாட்டு மக்களுக்கு உன்ன உறுதியைக் கொடுத்து கல்வியிலும், தொழிலிலும், விவசாயத்திலும், கணிப்பொறியிலும் உயர்ந்த நாடாக, வளர்ந்த நாடாக உழைத்து முன்னேற அருள் புரிவாயாக என்று வேண்டுவார்.

தன் இந்திய நாடு 2020 ஆண்டிலே ஒரு சிறந்த வல்லரசு நாடாக மாற வேண்டும், மக்கள் எல்லா நலன்களும் பெற்று மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதே அவருடைய கனவாகும். அவருடைய கனவு பலித்து விட்டதா என்றால் 'இல்லை' என்று தான் சொல்ல வேண்டும். மாணவர்களும் இளைஞர்களும் அவர் சொன்னபடி கடுமையாக உழைத்து, பாடுபட்டு விரைவிலேயே அவர் கண்ட கனவை நனவாக்க வேண்டும். இது தான் நாம் அவருக்குச் செய்யும் மரியாதையும் நன்றியும், கடமையும் ஆகும். கூடிய விரைவில் நம் நாடு வல்லரசு நாடாக மாற வேண்டும். அவருடைய கனவை நனவாக மாற்ற எல்லோரும் பாடுபடுவோம்.

இராமேஸ்வரம் தீவில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து ஒரு தலை சிறந்த விஞ்ஞானி ஆன அவருடைய பிறந்த நாளை (15-10) அக்டோபர் 15ம் நாளை "உலக மாணவர் தினம்" என்று ஐ.நா. சபை அறிவித்து உள்ளது.

பெயர். ஆர். ஜெயகாமாக்ஷி

L.M. No 467

வயது - 79

இந்தக் கட்டுரை இந்தப் போட்டிக்காகவே எழுதப்பட்டது.

இது என் சொந்தப் படைப்பு. இது வரை எங்கேயும் பிரசுரமாகவில்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.